DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.73/2021**

Prosecution **PW.9**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சண்முகம் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | செல்லப்பன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025
எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் பால்ராஜ்புரம் சின்னமநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இன்சூரன்ஸ் ஏஜென்ட்டாக இருக்கிறேன். சாட்சி V.A. பெரியசாமி என்பவரை தெரியும் பக்கத்து ஊரை சேர்ந்தவர் ஆவார். என்னிடம் காட்டப்படும் பிரபாகரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பிரபாகரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**2.** தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 12 வருடங்களுக்கு முன்பு பகல் 12.00 மணிக்கு சாமியப்பன் என்பவரின் தோட்டத்தில் நகை திருடு போனதற்கு புகார் கொடுக்க சென்றபோது புகார் கொடுத்ததற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். 3 மாதம் கழித்து திருடிய நபரை பிடித்துவிட்டதாக போலிசார் சொன்னார்கள் நாங்கள் போவதற்குள் அவர்களை காவல்நிலையம் கூட்டிச்சென்றார்கள். போலிசார் வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 18.12.2012 ம் ஆண்டு 19.30 மணிக்கு மாயனூர் காவல் நிலையத்தில் நான் சென்றபோது அங்கு இருந்த பிரபாகரன் என்பவரை என்முன்னிலையிலும் பெரியசாமி என்பவரின் முன்னிலையிலும் எந்தவித அச்சுறுத்துலும், துன்புறுத்தலும் இன்றி காவல் ஆய்வாளர் விசாரித்து பிரபாகரன் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவங்களில் நேரில் பார்த்து போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் பிடித்தாக மட்டும் சொன்னார்கள்.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.